தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723
Vol. 4 Issue: 01 October 2025

# திருக்குறள் போற்றும் பெண்கள்
## Women Praised by Thirukkural

**மு. ஜெயராணி**
உதவிப்பேராசிரியர், மொழிகள்துறை-தமிழ்ப்பிரிவு,
கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர் – 21
**M. Jeyarani**
Assistant Professor, Department of Languages – Tamil Division, Karpagam Academy of Higher Education, Coimbatore – 21
Email ID: jeyaranihasika8220@gmail.com, ORCID: https://orcid.org/0009-0008-2478-1792

**Abstract:**

The Thirukkural, revered as the "Universal Veda" (Ulagap Podhumarai) and a pinnacle of world literature, stands as a fundamental moral text offering essential truths and philosophical insights for human society. This epic work, continually yielding new interpretations, serves as an indispensable guide to ethical living, steering humanity towards virtue. Its profound impact is echoed in the proverb, "Aalum and Velam (barks) strengthen the tooth; Naalum and Irandum (Naaladiyar and Thirukkural) strengthen the word," underscoring its foundational role in shaping refined discourse. As the epicenter of Tamil culture, the Thirukkural significantly guides the Tamil populace toward elevated standards of life. Enduring as a source of nectarine knowledge and strength, it contains immeasurable wealth, offering boundless and fresh meanings like an inexhaustible river to all seekers. Within its vast scope, Thiruvalluvar notably elevates the dignity of women, placing them in significant positions across numerous couplets, a sentiment echoed by poet Bharathiyar's pronouncements on female equality and prosperity, and by ancient Tamil texts like Naanmani kadigai and Narrinai that praise women as household lights and mansion lamps. The Thirukkural powerfully advocates for the eradication of social disparities against women, emphasizing their high esteem and independent individuality, recognizing that honoring womanhood leads to societal prosperity. This article intends to delve into these vital concepts concerning women as meticulously recorded by Valluvar.

**Keywords:** Kūttu, Koṯṟavai, Vel Pari, Parambu, Ancient Tamil Performing Arts, Mathangan, Puṟanāṉūṟu.

Tamilmanam

**ஆய்வுச் சுருக்கம்:**

"உலகப் பொதுமறை" என்றும், உலக இலக்கியங்களில் ஒரு சிகரமாகவும் போற்றப்படும் திருக்குறள், மனித சமூகத்திற்கான அத்தியாவசிய உண்மைகளையும், தத்துவார்த்த ஞானங்களையும் வழங்கும் ஒரு அடிப்படையான அற நூல் ஆகும். தொடர்ச்சியாகப் புதிய விளக்கங்களைத் தரும் இந்த மகத்தான நூல், மனிதகுலத்தை நல்வழிப்படுத்தி, அற வாழ்வை நோக்கி வழிநடத்தும் ஒரு தவிர்க்க முடியாத வழிகாட்டியாகத் திகழ்கிறது. இதன் ஆழமான தாக்கம், "ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்ற பழமொழியில் எதிரொலிக்கிறது. இது செம்மையான உரையாடலை

உருவாக்குவதில் அதன் அடிப்படையான பங்களிப்பைப் பறைசாற்றுகிறது. தமிழ் கலாச்சாரத்தின் மையமாக விளங்கும் திருக்குறள், தமிழ்ப் populace-ஐ உயரிய வாழ்க்கை நெறிகளை நோக்கி வழிநடத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. அமுத nectarine அறிவு மற்றும் வலிமையின் ஆதாரமாக நிலைத்து நிற்கும் இது, அளவற்ற செல்வத்தைக் கொண்டுள்ளது. இது அருந்தவமான ஆற்றைப் போல, தகுதியான அனைவருக்கும் எல்லையற்ற, புத்தாக்கமான அர்த்தங்களை வழங்குகிறது. அதன் பரந்த நோக்கத்திற்குள், திருவள்ளுவர் குறிப்பாக பெண்களின் கண்ணியத்தை உயர்த்திப் பிடித்து, பல குறட்பாக்களில் அவர்களை முக்கிய நிலைகளில் வைத்துள்ளார். இந்தக் கருத்தை, கவிஞர் பாரதியாரின் பெண் சமத்துவம் மற்றும் செழிப்பு குறித்த கூற்றுகளும், நாண்மணி கடிகை மற்றும் நற்றிணை போன்ற பண்டைய தமிழ் நூல்கள் பெண்களை இல்லத் தீபங்களாகவும், மாளிகைத் விளக்குகளாகவும் போற்றிப் புகழ்ந்ததும் எதிரொலிக்கின்றன. திருக்குறள், பெண்கள் மீதான சமூகப் பாகுபாடுகளை ஒழிப்பதற்கு வலிமையாக வாதிடுகிறது. பெண்களின் உயரிய மதிப்பையும், அவர்களின் தனித்துவமான அடையாளத்தையும் வலியுறுத்துகிறது. பெண்மையை மதிப்பது சமூகச் செழிப்புக்கு வழிவகுக்கும் என்பதை அங்கீகரிக்கிறது. இந்த உரை, வள்ளுவர் நுட்பமாகப் பதிவு செய்துள்ள பெண்களைப் பற்றிய இந்தக் கருத்தியல் கருத்துக்களை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**முக்கிய வார்த்தைகள்:** உலகப் பொதுமறை, திருக்குறள், பெண்கள்

**முன்னுரை**

"உலகப் பொதுமறை" என எல்லோராலும் போற்றப்படும் உலக இலக்கியங்களில் தலைசிறந்ததாய் கருதப்படும் திருக்குறள் மனித சமூகத்திற்கு தேவையான அடிப்படை உண்மைகளையும், வாழ்வியல் சிந்தனைகளையும் அறிவுறுத்தக் கூடிய முக்கிய நீதி நூல்களில் முதன்மையானதாகும்.

**"ஆலும் வேலும் பல்லுக்குறுதி**
**நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி"**

என்று மனித இனத்தை நன்னெறிப் படுத்தும் வாழ்வியல் வழிகாட்டியாகவும், காலந் தோறும் புது புது விளக்கம் தந்திடும் பேரிலக்கியமாகவும் திருக்குறள் திகழ்கின்றது. தமிழ் பண்பாட்டின் வாழ்விடமாகவும் தமிழர் பெருமக்களுக்கு பெரிதும் வாழ்வியல் நெறிகளை வழிகாட்டும் நூலாக திருக்குறள் விளங்குகிறது. அறிவுக்கும் ஆற்றலுக்கும் என்றும் அமுதமாய் விளங்கிவரும் திருக்குறள் மதிப்பிடற்கரிய செல்வத்தை தன்னகத்தே வைத்துக்கொண்டு வந்தோர்க்கு எல்லாம் இல்லை என்று இல்லாமல் வாரி வழங்கும் வள்ளலை போலத் தன்னை அணுகியவர்க்கெல்லாம் வற்றாத ஆறாய் புதுப்புதுப் பொருளை வழங்கும் இலக்கிய வல்லமை பெற்று திகழ்கின்றது. இத்தகைய பல்வேறு சிறப்புகளைக் கொண்ட திருக்குறளின் கண் திருவள்ளுவர் பெண்ணின் பெருமையையும், முக்கியத்துவத்தையும் பல குறட்பாக்களில் ஏணி படியாய் ஏற்றியிருக்கிறார்.

**எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே**

**பெண் இளைப்பில்லை காண்!**

என்பதோடு

**"பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா"**

எனவும் பாரதியார் பெண்ணின் சிறப்பினை வெளிப்படுத்துகிறார்.மேலும்,

**"மனைக்கு விளக்கம் மடவார்" என்று நான்மணிக்கடிகையும்(105)**

**"மனைக்கு விளக்காகிய வாணுதல் மனைமான் சுடர்" என்று நற்றிணையும் (104)**

பெண்ணின் சிறப்பினை போற்றுகின்றன.

பெண்களுக்கான சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கி சமுதாயத்தில் பெண்கள் போற்றப்பட வேண்டும். பெண்மை போற்றப்படும் போது சமுதாயம் மேன்மையுறும். பெண் பெண்ணாக தன்னை எதற்காகவும் இழக்காத தனித்துவமாக வாழ வேண்டும், என்பதைப் போன்ற எண்ணற்ற கருத்துக்களை வள்ளுவர் தம் நூலில் பதிவு செய்துள்ளார். அவற்றை சற்று உற்று நோக்கி ஆராய்ந்து வெளிக்கொணரும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**அறம் போற்றும் பெண்கள்**

அன்பும் அறனும் கொண்டு இல்லறத்தில் மக்கள் வாழ வேண்டும் ஏனெனில், அன்பு பகையை முறிக்கும், தம்மை வளர்க்கும், நல்லுறவு ஏற்பட வழிவகுக்கும். அறம் செய்வதற்கு அடிப்படையாக மனத்தூய்மை விளங்கும்.

மேலும், அறம் செய்து வாழ்வதும், மற்றவர்கள் பழிக்கும் மாசில்லாத தன்மையுடையதாக விளங்க வேண்டும் என்பதை திருவள்ளுவர்,

**அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன் பழிப்பது இல்லாயின் நன்று**
**(குறள் -49)**

பெண்களை போற்றும் அறத்தினை விளக்குகின்றார். இல்வாழ்வின் பண்பு. அன்பு செலுத்துவது அதன் பயன், அறம் செய்வது என்பதனை,

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது**
**(குறள் -45)**

என்ற குறளின் வாயிலாக இல்லற வாழ்வில் பெண்ணின் முதன்மையையும் அன்பு செய்வதில் பெண்ணுக்கு நிகர் பெண்களே என்பதைம் குறிப்பிட்டுள்ளார்.

**கற்பு நெறியும் பெண்களும்**

கற்பு என்னும் மனத்திண்மை இருக்கமானால் பெண்ணை விட பெருமை உடையவை வேறு எவை உள்ளன? என்று ஆணித்தரமாக வள்ளுவர்,

**சிறைகாக்கும் காக்கும் காப்பு எவன் செய்யும்**
**மகளிர் நிறைகாக்குங் காப்பே தலை**
**(குறள் -57)**

என எடுத்து விளம்புகின்றார்.

மகளிர் சிறை வைத்துக் காப்பதால் பயனில்லை. அவரின் மனத் திண்மையால் தம் கற்பை காத்துக் கொள்ளும் காவல் சிறந்தது என்று ஆடவர்க்கு அறிவுரை சொல்லும் வகையில் பெண்ணின் குணத்தையும் இயல்பினையும் எடுத்தியம்புகிறார் வள்ளுவர் .

**"கற்பெனப் படுவது சொல் திறம்பாமை "**

**(கொன்றை வேந்தன் )**

சொன்ன சொல் தவறாக நடந்து கொள்வதே கற்பு எனப்படும் என்பதையும் ஔவையார் கூறி இருப்பது சிறப்பு.

**"கற்பென்று சொல்ல வந்தால் இரு மாதரையும் பொதுவில் வைப்போம்"**

என ஆணுக்கும் பெண்ணுக்கும் மனதளவில் திண்மையாக இருத்தல் வேண்டும் என்றும் கற்பு என்பது இருவரின் பொதுவான சிந்தனை என்பதனையும் பாரதியாரும் கூறி இருப்பது குறிப்பிடத்தக்கது.

அன்பும் அறிவும் ஆற்றலும் கொண்ட மனைவியே இல்லறத்திற்கு இன்றியமையாதவள் இல்லறத்தின் தூணாக இருக்கும் பெண்ணிற்கு கற்பு என்பது மிகவும் முக்கியமாக கருதப்படும் நற்பண்புகளில் ஒன்றாகும். அக்கற்பின் இயல்பினை பற்றி வள்ளுவர் தெளிவாகக் கூறுகிறார். ஒழுக்கமுள்ள மனநிலையே கற்பு என்பதனை வள்ளுவர்,

**பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மையுண்டாகப் பெறின்.**

**(குறள் -54)**

என்ற குறள் மூலம் விளக்குகிறார்.

**ஈடில்லா சீர்மை மிகுந்த மகளிர்**

தெய்வத்தை வணங்காமல் தன் கணவனையே தெய்வமாக வணங்கும் பெண்களை வள்ளுவர், வேண்டும் பொழுது பெய் என்று சொன்னால் மழையும் பொழியும். பெண்கள் இயற்கையையே தன் கட்டுக்குள் வைத்திருப்பவர்களாக வள்ளுவர்,

**தெய்வம் தொழஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை .**

**(குறள் -54)**

என பெண்மையை சிறப்பிக்கின்றார்.

கணவனே கண்கண்ட தெய்வமாய் கருதும் பெண்கள் இயற்கையே தன் கட்டுக்குள் கொண்டுவரும் வல்லமை பெற்றவராய் திகழ்வர்.பெண் என்றவுடன் மழை பெய்யும் இயற்கையும் அவர்களுக்கு கட்டுப்படும் எனும் பொருள்பட இக்குறள் அமைகிறது.

இல்லற பெருமையை கட்டிக் காக்கும் பெண்களை வள்ளுவர்,

**பெற்றார் பெறின் பெறுவர் பெண்டீர் பெருஞ் சிறப்பு**
**புத்தேளிர் வாழும் உலகு.**

**(குறள் -58)**

என்று பெண்ணின் சிறப்பை நயமாக உணர்த்துகிறார். அதாவது தன்னை மனைவியாக பெற்ற கணவனால் சிறப்பிக்கப்படும் பெண்கள் மேலுலகிலும் பெரும் சிறப்பினை பெறுவார்கள் என்று பெண்ணின் சிறப்புறும் தன்மையைக் குறிப்பிடுகிறார்.

**பெண்ணின் குணமும் இல்லற சிறப்பும்**

ஒருவனுடைய குணத்தின் தன்மையை கொண்டு தான் அவன் நல்லவனா? தீயவனா? என்று கூற முடியும். இதனடிப்படையில் வள்ளுவர், பெண்ணின் குணத்தைக் கொண்டு அதன் பயனையும்

**மங்கலம் என்ப மனை மாட்சி மற்றுஅதன்**

**நன்கலம் நன்மக்கட் பேறு.**

**(குறள் -60)**

என்று விளக்குகிறார். மனைவியின் சிறந்த குணங்களே இல்லறத்திற்கு மங்கலமாகும். அதன் அணிகலன் நல்ல மக்களை பெறுதலாகும் என்று குணங்களின் வழி அதன் பயனை வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

**பெண்ணின் திறனும் விருந்தோம்பல் பண்பும்**

இல்லத்தை ஆள்பவள் இல்லாள் அந்த இல்லாள் முகமலர்ச்சியோடு விருந்தினரைப் போற்றுவதால் தான் அவ்வீட்டில் திருமகள் குடியிருக்கிறாள், என்று கூறுவதிலிருந்து பெண்ணின் உண்மையான பணிவும் அறமும் பளிச்சிடுகின்றன. இதனை,

**அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**
**நல் விருந்து ஓம்புலான் இல.**

**(குறள் -84)**

என்ற குறள் மூலம் தெளிவாகக் கூறுகிறார்.

இல்வாழ்க்கை என்ற தவம் சீராக ஒழுகப் பெண் பெருந்துணையாகிறாள். அதனால் தான் அவளை, ”இல்லாள்” ”இல்லத்தை ஆள்பவள்” என்ற சொல் தந்து இல்லத்தரசி ஆக்குகிறார் வள்ளுவர், ஒரு ஆண் நாட்டையும் தான் செய்யும் பணிக்கு எப்படி தலைவனாகிறான் அல்லது குடும்பத்திற்கு எப்படி தலைவன் ஆகிறான். அதுபோல, பெண்ணானவள் எங்ஙனம் இல்லத்தில் செயல்படுத்தி கடமை ஆற்றிட வேண்டும் என்பதனை,

**தற்காத்து தற்கொண்டான் பேணித் தகைச் சான்ற**
**சொற்காத்து சோர்விலாள் பெண்.**

**(குறள் -56)**

என்ற குறள் மூலம் உணர்த்துகிறார்.

இந்த குறளே பெண்ணுரிமையைச பறைசாற்றும் பேறு பெற்ற குறள் என்று கூறின் அது மிகையாகாது. கற்பு நெறி தவறாது தன்னை காத்துக் கொள்ளும் தகுதி உடையவளாகவும் தன் கணவனையும் பாதுகாக்க கூடியவளாகவும் பெருமை மிகுந்த சொல் உண்டாகும்படி இல்லறத்தை காப்பாற்றி சோர்வின்றியும் தன்னை சார்ந்தவர்களையும் சோர்வு இல்லாமல் கட்டிக் காப்பாற்றி தன்னிடம் ஏதேனும் ரகசியம் யாரேனும் சொல்லினும் கூட அதையும் வேற இடத்தில் சொல்லாது தன் மனதிலே வைத்து வாழ்பவளே சிறந்த பெண் என்ற பெருமையை பெண்ணுக்கு தந்திருக்கிறார் வள்ளுவர்,

இதனைப் போன்று பாரதியாரும் அன்பான கணவனின் எல்லா செயல்களுக்கும் உதவக்கூடிய இயங்கு சக்தியாக விளங்குபவளே பெரும் சிறப்புக்குரிய பெண் என்பதனை,

**காதலொருவனைக் கைப்பிடித்து அவன்**
**காரியம் யாராலும் கைக் கொடுத்து** என்ற வரிகளில் குறிப்பிடுகிறார்.

**பெண்ணின் மாண்பு**

ஆணின் ஒட்டுமொத்த வாழ்க்கைக்கும் துணை என்னும் வகையில் வாழ்க்கைத் துணையாக பெண் விளங்குகிறாள் அவள் இன்றி அணுவும் அசையாது அவளின் மாட்சியும், வீட்சியுமே இல்லறத்தின் மாட்சியும் வீட்சியும் என்று பின்வரும் குறளில்,

**இல்லாதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை.**

**(குறள் -53)**

இல்லத்தை ஆட்சி செய்யும் இல்லாள் மாண்புடையவளாகத் திகழும் போது அந்த இல்லமே மேன்மையடைகிறது. மனைக்குரிய மாண்பு ஒருவனது மனைவியிடத்தில் இருப்பின் வேறு எதுவும் இல்லையென்றாலும் இருப்பது போல் ஆகிவிடும் . அம்மாண்பு அவளிடத்தில் இல்லையாயின் அனைத்தும் இருப்பினும் எதுவும் இல்லாதது ஆகிவிடும் என குறிப்பிடுகிறார்.

கணவனுக்கு மனைவி என்பவள் மிகவும் முக்கியமான துணையாக விளங்குகிறாள். தலைவியுடன் வாழும் வாழ்க்கையை விட பொன்னுலக வாழ்க்கை இனிதாகாது இக்கருத்தை அறிவுறுத்தும் வகையில்

**தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்**

**தாமரை கண்ணால் உலகு.**

**(குறள் -1103)**

இவ்வாறு தெளிவுபட கணவனுக்கு மனைவியும் மனைவிக்கு கணவனும் மிக முக்கியம் என்று கூறுகிறார்.

**தாய்மை நிலையும் பெண்ணின் மேன்மையும்**

பெண் பண்புடைய மக்களை பெறுவதன் வழி தாய்மையின் உயர்வினையும் பெண்ணின் தன்மையையும் புலப்படுத்துகின்றார். அதனால் தான், தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ் அமிழ்தினும் இனிது. என்றும், குழந்தைகள் மெய் தீண்டல் உடற்கின்பமாகவும், சொற்கேட்டல் செவிக்கு இன்பமாகவும் குறிப்பிடுகின்றார். அவை மட்டுமல்லாது,

**ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனை**

**சான்றோன் எனக்கேட்ட தாய்.**

**(குறள் -53)**

தன் மகனை சான்றோனாக கேட்ட தாயின் மன மகிழ்ச்சியினை இக்குறளின் வழி காட்டி இருக்கிறார் வள்ளுவர்,

தலைமகளின் உள்ள குறிப்புகளைச் சுற்றுவதற்காக அவளின் பார்வையினை கூறும்போது,

ஒரு நோக்கு நோய்நோக்கு என்றும், இன்னொன்று நோய்க்கு மருந்து என்றும், குறிப்பிடுகின்றார். பெண்ணின் மென்மையை குறிப்பிடும்போது,

**அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்**

**அடிக்கு நெருஞ்சி பழம்.**

**(குறள் -1120)**

என்று கூறுகின்றார்.

**முடிவுரை**

திருக்குறள் பெண்ணின் பண்பாட்டு சீர்மையை ஒளிர்விக்கும் நேர்மையான வேதமாகும். திருக்குறள் அறநெறி கருத்துகளைப் புகட்டுவதற்காகத் தோன்றினாலும் மகளிர் சமுதாயம் போற்றும் நல்லறமான மாண்புகளை எடுத்துரைத்துப் பாடுவதிலும் அக்கறை கொண்டு விளங்குகிறது.

வள்ளுவர் பெண்ணை அன்புடையவராகவும், அறம் சார்ந்தவராகவும் பண்பு நிலை உடையவராகவும் போற்றி உள்ளார். இத்தகு சிறந்த நிலையில் நல்வாழ்வு வாழ்கின்றோர் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்" என திருவள்ளுவரால் போற்றப்படுகின்றனர். உலகப் பொதுவான கருத்துகளையும் அறநெறி கருத்துக்களையும் கூறி தமிழர் வாழ்வியல் முறைக்கு சிறந்த வழிகாட்டியாகவும் நல்லதொரு நூலாக விளங்குகிறது. என்பதனை, பெண்ணின் பெருமை, மேன்மை, தாய்மை உணர்வு, மென்மை போன்ற கருத்துகளையும் நமக்கு தெளிவுபடக் கூறுகிறது.

**துணை நின்ற நூல்கள்:**

1. **திருக்குறள் பரிமேலழகர் உரை**, புலியூர்க் கேசிகன், பூம்புகார் பதிப்பகம், சென்னை- 2004
2. **பாரதியார் கவிதைகள்**, திருமகள் நிலையம், விசா பப்ளிகேஷன்ஸ், online at Panuval.com
3. **நான்மணிக்கடிகை**, பதிப்பாசிரியர் முனைவர். இரா.மாதவன், தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம். ஜீன் -2022, தஞ்சாவூர்.
4. **நற்றிணை,** புலியூர் கேசிகன், பாரதி பதிப்பகம்.

**References:**

1. Thirukkural with Parimel Azhagar's Commentary. Translated by Puliyur Kesigan. Chennai: Poompuhar Pathippagam, 2004.
2. Bharathiyar's Poems. Thirumagal Nilayam, Visha Publications. Available online at Panuval.com.
3. Nanmanikadigai. Edited by Dr. R. Madhavan. Thanjavur: Tamil University, June 2022.
4. Nattrinai. Translated by Puliyur Kesigan. Bharathi Pathippagam.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam